# பாலினம்
மற்றும்
# பாலியல்

# பாலினம் மற்றும் பாலியல்

## முன்னுரை:

பாலினக் குழப்பம் (Gender Dysphoria) என்ற பிரச்சனை சமூகம் மற்றும் அதன் அனைத்து அமைப்புகளையும் (திருச்சபை, திருமணம், கல்வி, அரசாங்கம்) பாதிக்கிறது. 19ஆம் நூற்றாண்டிலிருந்து, பாலியல் சுதந்திர இயக்கம் விரிவடையத் தொடங்கியது. ஆரம்பத்தில், இது பெண்களின் உரிமைகளுக்காகவே இருந்தது. பின்னர், LGBTQIA+ (ஓரினச்சேர்க்கை பெண்கள், ஓரினச்சேர்க்கையாளர் ஆண்கள், இருபாலினத்தவர், திருநங்கை, வினோதம் அல்லது கேள்வி கேட்பவர், ஊடுபாலினம், பாலீர்ப்பு இல்லாதவர்கள்) தனித்துவங்களை ஏற்றுக்கொள்வதற்காகவும் பல்வேறு சமூக இயக்கங்களாக பிரிந்தது.

மலேஷியாவில் ஓரினப் பாலின உறவை சட்டவிரோதமாக அறிவித்திருக்கிறது. இருப்பினும், சில அமைப்புகள் ஆண் மற்றும் பெண் அல்லாத பிற பாலினங்களை ஏற்றுக்கொள்ள சட்ட அனுமதி வழங்க வேண்டும் என ஆதரிக்கின்றன. மலேஷியாவில் உள்ள கிறிஸ்தவ சமூகம் மற்றும் திருச்சபைகள் இந்தப் பாலின மாற்றத்தை ஏற்றுக்கொள்வதா? அல்லது திருமணத்திற்கான பார்வையை மறுபரிசீலனை செய்வதா என்பது பெரும் கேள்வியாக உள்ளது.

இந்த ஆவணம் முதலில் அசெம்ப்ளீஸ் ஆஃப் காட் மலேஷியா (Assemblies of God Malaysia) எனும் கிறிஸ்தவ இயக்கத்தின் நிலைப்பாட்டை விளக்கும். பின்னர், மலேசியாவில் ஊழியம் செய்யும் போதகர்கள் தங்கள் சபைகளுக்குளே இந்த விவகாரங்களைத் தீர்மானிக்க தேவையான மேலதிக விளக்கங்களையும் வழங்கும்.

## விளக்கங்கள்:

இந்த ஆவணத்தில் பயன்படுத்தப்படும் சில முக்கிய வார்த்தைகளின் விளக்கங்கள்:

ஓரினச்சேர்க்கையாளர்: ஒரே பாலினத்தவரின் மீது பாலியல் ஈர்ப்பு கொண்டிருக்கும் ஒருவர்.

பாலினம் (Gender): ஒரு மனிதன் உடலளவில் ஆண் அல்லது பெண் என வகைப்படுத்தப்படும் நிலை.

இரு பாலின உறுப்புகளுடன் பிறந்தவர்கள் (Intersex): ஆணின் மற்றும் பெணின் உடல் உறுப்புகளுக்கிடையே முரண்பாடு கொண்ட ஒருவர்.

ஓர் பாலின ஈர்ப்பு (Same-Sex Attraction - SSA): ஒரே பாலினத்தினரைப் பற்றிய பாலியல் ஈர்ப்பு.

ஓர் பாலின நடத்தை (Same-Sex Behaviour - SSB): ஒரே பாலினத்தவருடன் பாலியல் உறவு கொள்ளுதல்.

# AG மலேஷியாவின் நிலைப்பாடு

1. தேவன் மனிதர்களைத் தம்முடைய சாயலாக படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை படைத்தார்.
2. ஆண்கள் மற்றும் பெண்கள் பாலியல் ரீதியாக வேறுபடுகின்றனர், ஆனால் சமமான தனிப்பட்ட கனத்துக்குரியவர்கள்.
3. திருமணம் என்பது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒன்றிணைவது.
4. பாவமே மனிதரின் அனைத்து பாலின முரண்பாடுகளுக்கும் மூல காரணமாகும்.
5. ஓரினச்சேர்க்கை, பலதார மணம் மற்றும் பலதார உறவு உள்ளிட்ட பிற வகையான இணைப்புகள் பாவமானவை மற்றும் தடைசெய்யப்பட்டவை. (உதா: சொடோமி, பலதாரா திருமணம், பலமனையியல்)
6. திருமணத்திற்கு வெளியே நடக்கும் எந்த பாலியல் செயல்களும் பாவமானவை மற்றும் தடைசெய்யப்பட்டவை.
7. ஓர் பாலின நடத்தை (Same-Sex Behaviour) ஒரு பாவமாகும், அதுவே ஒரே பாலினத்தவருக்கிடையே ஏற்படும் பாலின உறவாக இருந்தாலும் கூட.
8. தேவன் ஒரே பாலினத்தவருக்குள்ளே ஈர்ப்பு ஆசைகளை கொடுக்கவில்லை. அவை மனிதனின் வீழ்ச்சிக்கு பின்னர் ஏற்பட்ட விளைவுகள். புணர்ச்சி இச்சைகளுக்கு எதிராக போராடுவது போலவே ஒரே பாலின ஈர்ப்புகளுக்கு எதிர்த்து போராட வேண்டும்.
9. ஒரே பாலின உறவில் இருந்தவர்களும், மற்ற எந்தவொரு முறைகேடான பாலிய உறவில் ஈடுபட்டவர்களும், மனந்திரும்பி இயேசுவை நம்பினால் அவர்களுக்கு இரட்சிப்பு உண்டு.
10. சிலர் பிறப்பிலேயே பாலியல் மரபணு குறைபாடுகளுடன் இருக்கலாம் (Intersex). அவர்களும் தேவனின் சாயலாக படைக்கப்பட்டவர்கள் என்பதால், அவர்களும் தனிமனித கனத்துக்குரியவர்கள்.
11. பாலின வேறுபாடு உள்ளவர்கள் தங்கள் பாலினத்தைத் தேர்வு செய்ய முடியாமல் போகலாம். ஒரே பாலின ஈர்ப்புடன் போராடுபவர்கள் தங்கள் பாலியல் விருப்பத்தை தங்கள் உடலின் பாலினத்துடன் ஒருங்கிணைக்காமல் இருக்கலாம். அவர்கள் இறுதியில் உண்டாகும் புதிய உயிர்த்தெழுந்த சரீரத்திலே தங்கள் பாலியல் தன்மையை மீட்டுக்கொள்வார்கள்.
12. பாலின வேறுபாடு உள்ளவர்களிடம் எந்தவித பாகுபாடும் காட்டப்படக்கூடாது. கிறிஸ்து இயேசுவின் நிறைவில் அவர்கள் எல்லோரையும் நேசிக்க வேண்டும்.
13. பாவமான பாலியல் ஆசைகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று, கிறிஸ்துவுக்குள், பரிசுத்தத்திலும், முழுமையிலும் வாழ நம்பிக்கையும் விடுதலையும் உண்டு.

# பொதுவான கேள்விகளுக்கு வேதாகம பதில்கள்.

*கேள்வி: சிருஷ்டிப்பின் குறிப்பில் (ஆதியாகமம் 1-2) பாலினத்தைப் பற்றிப் பேசவில்லை என்று சில ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். பாலினம் என்பது சமூகம் தனிநபர்கள் மீது திணிக்கும் ஒரு சமூகக் கட்டமைப்பு என்றும் அது பிறக்கும்போதே பாலியல் உறுப்புகளை கொண்டு வரையறுக்க முடியாது என்கின்றனர். மேலும், சிலர் ஆண் மற்றும் பெண் பாலியல் உறுப்புகளுடன் பிறக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் ஆண் மற்றும் பெண் என்ற இரட்டை பாலினத்தை ஏன் கட்டுப்படுத்த விரும்புகிறார்கள்? திருமண உடன்படிக்கையை ஒரு ஆணும் பெண்ணும் இணைவது மட்டுமே என்று ஏன் மட்டுப்படுத்த வேண்டும்?*

ஆதியாகமம் 1:27 கூறுகிறது, "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். " (ESV). ஆண் மற்றும் பெண்ணின் சாயல் தேவனுடைய சாயலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஆதியாகமம் 2 இல், தேவன் முதலில் ஆதாமையும் பின்னர் அவனுக்கு ஏற்ற துணையாக ஏவாளையும் படைத்த விரிவான செயல்முறை கொடுக்கப்பட்டுள்ளது. "பின்பு தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதியாகமம் 2:18, ESV).

ஆதாமும் ஏவாளும் இணைந்த உறவே அனைத்து மனிதர்களுக்கும் திருமண மாதிரியாக அமைந்தது: "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதியாகமம் 2:24).

திருமணத்திற்கான இந்த அடிப்படை கோட்பாட்டை (ஆதியாகமம் 1:27 மற்றும் 2:24.) இயேசுவும் மேற்கோள் காட்டுகிறார். (மத்தேயு 19:4-6; மாற்கு 10:6-8).

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான திருமண உறவுக்கு வெளியே எந்தவொரு பாலியல் உடலுறவையும் வேதாகமத்தில் தடை செய்யப்பட்டிருக்கிறது. இதில் பின்வருவன அடங்கும்:

வேசித்தனம் - திருமணத்திற்கு வெளியே ஒருவருடைய துணையை தவிர வேறு ஒருவருடன் பாலியல் உறவு கொள்ளுதல்.(யாத்திராகமம் 20:14; மத்தேயு 19:18; ரோமர் 13:9; யாக்கோபு 2:11)

விபச்சாரம் - திருமணமில்லாத ஆணும் பெண்ணும் பாலியல் உறவில் ஈடுபடுதல்.(யாத்திராகமம் 22:16-17; உபாகமம் 22:13-21, 28-29; 1 கொரிந்தியர் 6:18; 2 கொரிந்தியர் 11:2; 12:21; கலாத்தியர் 5:19; எபேசியர் 5:3; கொலோசெயர் 3:5; 1 தெசலோனிக்கேயர் 4:3

விபச்சாரம் - தொழில் சார்ந்த பாலியல் செயல்பாடு (1 கொரிந்தியர் 6:15-18)

குடும்ப உறவுகளில் பாலியல் செயல்கள் - குடும்ப உறுப்பினர்களுக்கிடையே அல்லது நெருங்கிய உறவினர்களுக்கிடையே நடக்கும் முறைகேடான பாலியல் செயல்பாடு (லேவியராகமம் 20:11-21; உபாகமம் 22:30; 1 கொரிந்தியர் 5:1-2) மிருகங்களோடு பாலியல் உறவு (Bestiality): மனிதரும் மிருகமும் பாலியல் உறவு கொள்ளுதல். (லேவியர்: 18:23; 20:15-16)

ஓரினச்சேர்க்கை - ஒரே பாலினத்தவர்களுக்கிடையே பாலியல் உறவு. (லேவியராகமம் 18:22; ரோமர் 1:24-27; 1 கொரிந்தியர் 6:9-10)

வேதாகமத்தில் தொடர்ந்து மனித இனம் இரண்டு பாலினங்களாகவே படைக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துகிறது (ஆண் மற்றும் பெண்). ஆதியாகமம் 1-2 ல் பாலினத்தை மறுபரிசீலனை செய்து, கூடுதல் பாலினங்களை சேர்ப்பது வேதாகம கருத்திற்கு முரணானதாகும்.

*கேள்வி:யூதர்கள் கடந்த காலத்தில் பிற இனத்தவர்களை (புறஜாதிகள்) விலக்கியதைப் போலவே, ஒரே பாலின உறவுகளை நிராகரிப்பது LGBTQ சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கிறதா?*

ஆதி திருச்சபைகளில் புறஜாதியினரைச் சேர்த்துக்கொண்டது சந்தேகத்திற்கு இடமின்றி இன்றைய விசுவாசிகளுக்கு ஒரு மிகப்பெரிய பாடமாகும். ஆதி திருச்சபைகளில் யூத கிறிஸ்தவர்கள் புறஜாதியினரை தங்கள் விசுவாச சமூகத்தில் வரவேற்க தயங்கினார்கள். அப்போஸ்தலர் நடப்படிகள் 11-ல், பேதுரு தனது ஊழியத்தை புறஜாதியினருக்கு (கொர்நேலியுடைய வீட்டார்) கொண்டு சென்றதை நாம் பார்க்கமுடியும். அப்போஸ்தலர் 15 இல், புறஜாதியினர் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமா என்று விவாதிக்க எருசலேமில் கூடியபொழுது, விசுவாசிகள் கர்த்தராகிய இயேசுவின் கிருபையால் இரட்சிக்கப்படுகிறார்கள் என்பதை திருச்சபை நினைவூட்டியது. (அப்போஸ்தலர் 15:11).

ஆனால், புறஜாதி விசுவாசிகள் இந்த நான்கு விஷயங்களை பின்பற்ற வேண்டும்:

(1) விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட பொருட்களுக்கு விலகியிருக்க வேண்டும்
(2) வேசித்தனத்திற்கு விலகியிருக்க வேண்டும்
(3) நெருக்குண்டு செத்ததிற்கு விலகியிருக்க வேண்டும்
(4) இரத்தத்திற்கு விலகியிருக்க வேண்டும்

இந்தக் கட்டுப்பாடுகள் புறஜாதி விசுவாசிகள் யூத விசுவாசிகளோடு சகோதரத்துவ ஐக்கியம் கொள்ள உதவும். அதே நேரத்தில், புறஜாதி விசுவாசிகள் மற்ற ஜனத்தை விட தனித்தன்மையுடன் வாழ வேண்டும் என்பதற்காக அடிப்படை நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும்.
தேவசபையில் சேர்க்கப்படுவது, அவர்கள் விரும்பியது எல்லாவற்றையும் செய்யலாம் என்று அர்த்தமல்ல. அப்போஸ்தலர் பவுல் ரோம், கொரிந்து போன்ற புறஜாதி கிறிஸ்தவர்கள் நிறைந்த சபைகளில் நடந்த ஒழுக்கக்கேடுகளைச் சுட்டிக்காட்டுகிறார். புறஜாதி கிறிஸ்தவர்கள் தேவனின் சிருஷ்டிப்பின் நோக்கத்திற்கு ஏற்ப திருச்சபையில் இணங்கி வாழ எதிர்பார்க்கப்படுகிறார்கள்.
அதனால், திருச்சபை ஒரே பாலின ஈர்ப்புகளுடன் போராடும் மக்களை வரவேற்றாலும் அவர்களை பரிசுத்த பாதைகளில் வழிநடத்துகிறது. அதே நேரத்தில், அதே நேரத்தில், பாலினத்திற்கான தேவனின் சித்தமும் விருப்பமும் திருமணமான பாலின தம்பதிகளுக்கு மட்டுமே என்று திருச்சபை தொடர்ந்து அறிவிக்கிறது.

*கேள்வி: வேதாகமம் காலாவதியானதா? முதல் நூற்றாண்டில் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் பாலியல் நோக்குநிலை பற்றிய விழிப்புணர்வு குறைவாகவே இருந்தது. நவீன அறிவியல் மனித உடலின் சிக்கலான தன்மையை வெளிப்படுத்துகிறது, இது பாலின மறுவரையறையை ஆதரிக்கிறது. நமது நவீன உலகில் பாலினத்திற்கான வேதாகம வரையறையை நாம் ஏன் இன்னும் வலியுறுத்துகிறோம்?*

வேதாகமம் "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய, கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" (எபிரேயர் 4:12-13,).
கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் காலாவதியாகாது. "ஆனால் கர்த்தருடைய வசனமோ

என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே." (1 பேதுரு 1:25; ஏசாயா 40:8). ஆகையால், வேதாகமத்தில் காணப்படும் சத்தியங்களும் நீதியும் தலைமுறைகளெல்லாம் நிலைத்து நிற்கும்.

மனிதன் வீழ்ச்சியுற்ற நாள் முதல் எல்லா விதமான பாலியல் இச்சைகளும், தவறுகளும் உலகில் நிலவுகின்றன. அவை தேவன் நியமித்த பாலின ஒழுங்கை மறுத்து, அவருடைய சித்தத்திலிருந்து மாறிப் போயின (ஆதியாகமம் 1:27, 2:24). முதல் நூற்றாண்டின் யூதர்களும் விசுவாசிகளும், தேவன் அளித்த கட்டளைகளையும், அவர் எழுதி வைத்த வார்த்தையையும் ஏற்றுக்கொண்டு, ஆணும் பெண்ணுமாகவே உருவாக்கப்பட்ட மனிதன் தேவனுடைய நோக்கத்தின்படி நடக்கவேண்டியதெனக் கற்றுக்கொண்டனர். தேவனுடைய கட்டளைக்கு விரோதமான பாலின ஆசைகள் நடத்தும் செயல்கள் பாவமாகும். "வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்". (1 கொரிந்தியர் 6:18-19, ). என்று வேதாகமம் எச்சரிக்கிறது. பாலிய இன்பத்திற்கான நியாயங்களைத் தேடுவதற்குப் பதிலாக எல்லா ஒழுக்கக்கேட்டிலிருந்தும் தப்பி ஓட வேதம் நமக்கு கற்பிக்கிறது (1 கொரிந்தியர் 6:18-20).

அறிவியல் உலகம் மனித உடலின் ஆழ்ந்த விசித்திரங்களை வெளிப்படுத்துகிறது; அத்தகைய விஷயங்களில் பிறவிக் குறைபாடுகளும், இயற்கையிலிருந்து விலகிய சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. கட்டுப்படுத்த முடியாத பாலின ஈர்ப்பு மனிதன் வீழ்ச்சியுற்ற தன்மையாலும், இந்தக் குறைபாடு நிறைந்த உலகினாலும்தான் உருவாகின்றது. குழந்தைப் பருவ வளர்ப்பு, அதிர்ச்சிகள் மற்றும் பாலியல் அனுபவங்கள் ஓரின பாலின ஈர்ப்புக்கும் பிற சிக்கலான பாலின நோக்கங்களுக்கும் காரணமாகின்றன. நவீன அறிவியல் கண்டுபிடிப்பு இந்த நோக்குநிலைகள் இயற்கையானவை என்பதை நியாயப்படுத்துவதில்லை. பாலினம் குறித்த தேவனின் வேதாகம வரையறையை மாற்றவுமில்லை (ஆதியாகமம் 1-2)

*கேள்வி: சோதோம் மற்றும் கொமோராவின் கர்வமும், உணவுப்பெருக்கும், அலட்சியமான அக்கறை மற்றும் ஏழைகளை ஆதரிக்கத் தவறியதற்காக நியாயந்தீர்க்கப்பட்டனர். ஆதியாகமம் 19:5 இல் உள்ள நிகழ்வு ஒரு கூட்டு பாலியல் வன்கொடுமை பிரச்சினையாக இருந்தது, அன்பான ஓரினச்சேர்க்கை உறவை அல்ல. ஓரினச்சேர்க்கையை மறுக்க இந்த நிகழ்வை இன்னும் ஏன் பயன்படுத்தப்படுகிறது?*

ஆதியாகமம் 19 இல் உள்ள சம்பவம் ஒரு கூட்டு பாலியல் வன்கொடுமை முயற்சியின் நிகழ்வாக இருந்தாலும், அந்தக் காட்சி நகரத்தில் முற்றிலும் ஒழுக்கக்கேடான கலாச்சாரத்தின் நிலையை காட்டுகிறது. ஆதியாகமம் 19:4-5 இல், நகரில் உள்ள அனைத்து ஆண்களும், இளம் வயதினரும் முதியவரும், அந்த இரண்டு ஆண்களை "அவர்களை அறிந்துகொள்ள" வெளியே வெளியே வருமாறு கோரினார்கள் என்று கூறப்படுகிறது. லோத்து உடனடியாக தனது இரண்டு மகள்களை அவர்களுக்கு வழங்கினார், "அவர்களை அறிவது" என்பது பாலியல் உடலுறவு கொள்வதாக அவர் புரிந்துகொண்டதைக் குறிக்கிறது. நகரத்தில் உள்ள ஆண்கள் அடிக்கடி வழக்கமாக ஓரின பாலின நடத்தைகளைப் பின்பற்றியிருப்பார்கள். இல்லையென்றால் இரண்டு விசித்திர அந்நியர்களுடன் பாலியல் உறவு கொள்ள நகரத்தின் அனைத்து ஆண்களும் கோரிக்கைவிடுவது சாத்தியமல்ல.

சோதோம் மற்றும் கொமோரா மீதான நியாயத்தீர்ப்பு ஆதியாகமம் 19:5 இல் உள்ள நிகழ்வின் காரணமாக மட்டும் அல்ல. அதற்கு முன், கர்த்தர் ஆபிரகாமிடம், "சோதோம் மற்றும் கொமோராவுக்கு எதிரான கூக்குரல் பெரிது, அவற்றின் பாவம் மிகவும் கொடியது" என்று கூறினார் (ஆதியாகமம் 18:20,). இறுதியில், பத்து நீதிமான்கள் இருந்தால் நகரத்தை அழிக்க மாட்டேன் என்று கர்த்தர் வாக்குறுதி அளித்தார். ஆனாலும், ஆபிரகாமால் பத்து நீதிமான்களைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

உண்மையில், சோதோம் மற்றும் கொமோரா மீதான நியாயத்தீர்ப்பு ஓரினச்சேர்க்கை பாவத்தின்

மீது மட்டுமல்ல. அவர்கள் ஆணவம் கொண்டவர்கள், சுயநலவாதிகள், ஏழைகளை ஒடுக்கினவர்கள் (எசேக்கியேல் 16:49-50). அவர்கள் விபச்சாரத்திலும் தீய செயல்களிலும் ஈடுபட்டிருந்தனர் (ஏசாயா 3:9; எரேமியா 23:14). ஆனால், இங்கு குறிப்பிட்டுள்ள பாவங்களில் "ஓரின சேர்க்கை" பாவ பட்டியலில் சேராது என்று வாதிடவே முடியாது. தேவனுக்கு முன்பாக சோதோம் "அருவருப்பான செயல்" செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது (எசேக்கியேல் 16:50). அதே "அருவருப்பு" என்ற வார்த்தை, ஒரு ஆண் "ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்வது போலவே ஆணுடன் உடலுறவு கொள்வதற்கு" பயன்படுத்தப்படுகிறது. (லேவியராகமம் 18:22; 20:13,)
புதிய ஏற்பாட்டில், 2 பேதுரு 2:7-10, லோத்து "அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டார்; (வசனம் 7,) என்பதை வெளிப்படுத்துகிறது. அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.என்று யூதா 7 தெளிவுபடுத்துகிறது. எனவே, சோதோம் மற்றும் கொமோரா மீதான நியாயத் தீர்ப்பு அவர்களின் ஓரினச்சேர்க்கைக்கு கிடைத்த ஆக்கினை தீர்ப்பாகும்.

*கேள்வி: லேவியராகமம் 18:22 மற்றும் 20:13ல் உள்ள தடைச்செய்யப்பட்ட கட்டளைகள் இஸ்ரவேல் தேசத்திற்கே உரியது. அது புதிய ஏற்பாட்டின் விசுவாசிகளுக்கு இனி பொருந்தாது. அப்படியானால் திருச்சபை ஏன் இந்த பழமையான சட்டங்களை அமல்படுத்துகிறது?*

மோசேயின் உடன்படிக்கை புதிய உடன்படிக்கையில் உள்ள விசுவாசிகளுக்கு இனி கட்டுப்படாது (கலாத்தியர் 3:24-25; ரோமர் 7:1-25; எபிரெயர் 8:13). விசுவாசிகள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் உள்ளனர், தேவனையும் அயலானை அன்புகூருவதாகும் (மத்தேயு 22:37-39; 1 யோவான் 4:21).

இருப்பினும், பழைய ஏற்பாட்டில் உள்ள கட்டளைகள் இன்னும் பொருத்தமானவை. இயேசு நியாயப்பிரமாணத்தை அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். என்று உறுதியளித்தார். (மத்தேயு 5:17) மேலும் பல இடங்களில் பழைய ஏற்பாட்டு கட்டளைகளை மேற்கோள்காட்டினார் (எ.கா., மத்தேயு 5:27-28; 15:3-6; லூக்கா 10:25-28). புதிய வாழ்க்கையை வாழ விசுவாசிகளை ஊக்குவிக்கும் வகையில் பவுல் அப்போஸ்தலன் மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் குறிப்பிடுகிறார். (1 கொரிந்தியர் 9:8-9, 19-23; 14:21; 2 கொரிந்தியர் 8:15; 13:1; கலாத்தியர் 5:14; 6:2; 5:22-23).

சிலை வழிபாடு, கொலை மற்றும் விபச்சாரத்தைத் தடை செய்தல் போன்ற கட்டளைகள்,தேவனின் நித்திய மதிப்புகளை வெளிப்படுத்துவதால் இன்றும் செல்லுபடியாகும். பாலியல் சட்டங்களைப் பொறுத்தவரை, எல்லா கட்டளைகளும் பொருந்தாது. உதாரணமாக, லெவிரேட் திருமணம் (சந்தானமில்லாமல் மரித்த சகோதரரின் விதவையை திருமணம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம்) (உபாகமம் 25:5-6) மற்றும் பலதார மணத்திற்கான அனுமதி (உபாகமம் 21:15-17) ஆகியவை இனி பொருந்தாது. எனவே, எந்த ஒரு குறிப்பிட்ட சட்டம் நீண்டகால உலகளாவிய தார்மீக மதிப்பைப் பிரதிபலிக்கிறதா என்பதே கேள்வி.

ஒரே பாலின உடலுறவை எல்லா நேரங்களிலும் எல்லா மக்களுக்கும் தேவன் விதித்த தடையாக கருத வேண்டிய காரணங்கள் இவை:

(1) லேவியராகமம் 18:22 மற்றும் 20:13 விபச்சாரம், குடும்ப உறுப்பினர்களுக்கிடையே நடக்கும் தகாத உறவு மற்றும், மிருகங்களுடன் உறவு போன்ற ஒழுக்கக்கேடான பல தடைகளுடன் தொடர்புடையது.

(2) புதிய ஏற்பாட்டில் இந்த தடை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது (ரோமர் 1, 1 கொரிந்தியர் 6, 1 தீமோத்தேயு 1).
(3) லேவியராகமம் 18 மற்றும் 20 இல் உள்ள தடைகள் முழு வேதாகமத்திலும் பாலியல் நெறிமுறைகளின் நிலையான கருத்தாகும்.
(4) லேவியராகமம் 18 மற்றும் 20 இல் உள்ள தடைகள் சிருஷ்டிப்பின் இயற்கையான ஒழுங்கை ஈர்க்கின்றன. இந்தத் தடை, ஆண் மற்றும் பெண்ணுக்கு இடையே உள்ள ஒரே உடலுணர்வின் (one-flesh union) அடிப்படையில், இயற்கைக்கு மாறான எந்த முறையும் தவிர்க்க வேண்டும் (ஆதியாகமம் 1-2).
(5) சோதோம் மற்றும் கொமோரா மீதான தேவனின் நியாயத் தீர்ப்பு, மோசேயின் நியாப்பிரமானம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பே இந்த ஒழுங்கு தேவனுக்கு முக்கியமானது என்பதை காட்டுகிறது.

*கேள்வி: பாலினப் பிரச்சினையை குறித்து இயேசு எங்கும் பேசவில்லை ஓரினச்சேர்க்கையாளர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதை திருச்சபை ஏன் வலியுறுத்துகிறது?*

மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷங்களில், இயேசு திருமணம் என்பது ஆண் மற்றும் பெண் இருவருக்கிடையே உள்ள ஒன்றாக இருக்க வேண்டும். ஆதியாகமத்திலிருந்து (1:27; 2:24) மேற்கோள் காட்டினார், ஆதியிலே தேவன் ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார் இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். (மத்தேயு 19:4-6; மாற்கு 10:6-9). என்பதை இயேசு, திருமணத்திற்கான தேவனின் இயற்கை வடிவமாக உறுதிப்படுத்தி, ஆணும் பெண்ணும் இணையும் உடன்படிக்கையான உறவையே ஒரே சரியான பாலியல் ஒழுங்காக நிறுவினார். ஓரினச்சேர்க்கையை இயேசு குறிப்பிடவில்லை, ஆனால் தேவன் விதித்த பாலின உறவுகளைப் பற்றி அதிகாரத்துடனும் தெளிவுடனும் கற்பித்தார்; இதற்கு வேறு மாற்றம் இல்லை.

இயேசு பாலினத்தைக் குறித்த கேள்வியில் மௌனமாக இருந்தது, ஓரினசேர்க்கை உறவை அனுமதித்தார் என்று பொருள் அல்ல. விபசாரம், வேசித்தனம், பாலியல் முறைகேடுகளைத் தீவிரமாகக் கண்டித்தார் (மத்தேயு 15:19-20; மாற்கு 7:20-23). யூத பாரம்பரியம் ஓரினச்சேர்க்கை நடத்தையைக் கண்டிக்கிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டும் ஓரினச்சேர்க்கையைத் தடைசெய்கின்றன, ஏனெனில் அது தேவனின் பார்வையில் பாவமாக இருக்கிறது. (லேவியராகமம் 18:22; 20:13; ரோமர் 1:26-27; 1 கொரிந்தியர் 6:9-10; 1 தீமோத்தேயு 1:9-10; யூதா 7), மேலும் இயேசுவின் போதனைகள் ஒருபோதும் தேவனின் கட்டளைகளுக்கும் வேதத்திற்கும் முரணாக இருக்காது. கடவுளுக்கு முன்பாக நீதியையும் பரிசுத்தத்தையும் நிலைநிறுத்தும் திருச்சபை, ஒரே பாலின ஈர்ப்புகளுடன் போராடும் மக்களை ஒருநாளும் வெறுக்காது. ஆனால் பாவ இச்சைகளையையும் பாலியல் பாவங்களையும் வெறுக்கிறது.

*கேள்வி: ரோமர் புத்தகத்தில் ஓரினச்சேர்க்கை நோக்குநிலையை அப்போஸ்தல பவுல் கண்டிக்கவில்லை என்று ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். அவர் விக்கிரகாராதனை மற்றும் கட்டுப்பாடற்ற காமத்தின் பிரச்சினையை மட்டுமே உரையாற்றினார். திருச்சபை (ரோமர் 1:26-27) இந்த வசனத்தை தவறாக புரிந்துகொண்டதா?*

ரோமர் 1:18-32-ல், பவுல் மனிதகுலத்தின் பிரச்சினையை “சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிறார்கள்” என்று குறிப்பிடுகிறார், எனவே அவர்கள் தேவனின் கோபத்தை எதிர்கொள்கிறார்கள். சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள் எனவே, தேவன் அவர்களை தங்கள் இதயங்களின் இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். பின்னர் பவுல் பாவங்களின் பட்டியலை வழங்குகிறார், அதில் ஓரினசேர்க்கையும் அடங்கும்.

26 இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்;
அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான
அநுபோகமாக மாற்றினார்கள். 27அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல்,
ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து,
தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.
(ரோமர் 1:26–27 )

இங்கே, பவுல் ஒரு இணையான வழக்கை முன்வைக்கிறார். மனிதர்கள் அழிவில்லாத தேவனுடைய மகிமையை ஒரு உயிரினத்தைப் போன்ற ஒரு உருவத்திற்கு மாற்றியுள்ளனர். மனிதர்கள் தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். அதைப்போலவே, தேவனால் கொடுக்கப்பட்ட இயற்கையான பாலியல் உறவை, இயற்கைக்கு மாறான உறவுகளுக்கு மாற்றிவிட்டனர்.
இயற்கையான பாலியல் உறவுகள் என்பது ஆணும் பெண்ணும் இணையும் ஒழுங்காக தேவன் படைத்த உறவை குறிக்கிறது. அவை தேவனால் கொடுக்கப்பட்ட கனத்திற்குரிய உறவுகள். இதற்கு நேர்மாறாக, இயற்கைக்கு மாறான பாலியல் உறவுகள் ஓரினசேர்க்கையை குறிக்கின்றன; இது தேவனுடைய நோக்கத்துக்கு மாறாக, கனவீனமான ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரோமர் 1 பவுல் “இயற்கை” மற்றும் “இயற்கைக்கு மாறானது” என்ற அடிப்படையில் விவாதிக்கிறார். ஓரினசேர்க்கை உறவை அவர் கடுமையாக எதிர்க்கிறார்; இது தேவனுடைய நோக்கத்திற்கு எதிரானது என்பதையும் தெளிவாக குறிப்பிடுகிறார். ஒருவரின் பாலியல் நோக்குநிலை இயற்கையான மற்றும் இயற்கைக்கு மாறான உறவுகளை தீர்மானிக்கிறது என்று பவுல் கூறவில்லை. இயற்கைக்கு மாறான உறவுகள் “இயற்கைக்கு முரணானவை”, “அவர்களின் இயல்புக்கு முரணானவை” அல்ல என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. வேறு வார்த்தையில் கூறவேண்டுமானால் ஓரினச்சேர்க்கை உறவுகள் திட்டவட்டமாக பாவமானவை. “ஆணோடே ஆண்” அவலட்சணமானதை செய்வது தவறு என்று பவுல் தெளிவாகக் கூறுகிறார். இத்தகைய பாலியல் உறவுகள் தேவன் கொடுத்த பாலினத்தின் தன்மைக்கு முரணானவை. பவுலின் கூற்று வேதாகமத்தின் பாலினக் கண்ணோட்டத்துடன் ஒத்துப்போகிறது.

*கேள்வி: ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்கள் அப்போஸ்தலர் பவுல் 1 கொரிந்தியர் 6:9 மற்றும் 1 தீமோத்தேயு 1:10ல், ஒரின சேர்க்கை நடத்தையை கண்டிக்கவில்லை, ஆனால் பெரியவர்களால் இளையவர்களை தவறாக பயன்படுத்தப்படுவது பற்றி மட்டுமே கூறினார் என வாதிடுகின்றனர். தேவாலயம் பவுலின் கருத்தை தவறாக புரிந்துக்கொண்டதா?*

அப்போஸ்தலன் பவுல் இந்த இரண்டு பத்திகளிலும் பாவங்களின் பட்டியலில் ஓரினச்சேர்க்கை நடத்தையையும் குறிப்பிடுகிறார்:

9 அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா?
வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும்,

சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், (oute malakoi, oute arsenokoitai), 10திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (1 கொரிந்தியர் 6:9–10)

8 ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால், நியாயப்பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம். 9எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும், தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலைபாதகருக்கும், 10 வேசிக்கள்ளருக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும்,(arsenokoitais) மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும், 11 நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்தச் செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது. (1 தீமோத்தேயு 1:8–11)

“மலகோஸ்” மற்றும் “அர்செனோகோயிட்டஸ்” ஆகிய இரண்டு கிரேக்க வார்த்தைகள் சர்ச்சைக்குரிய விஷயமாகின்றன. முதல் வார்த்தையான மலகோஸிற்கு , “மென்மையானவன்” என்று பொருள். கிரேக்க-ரோமானிய இலக்கியங்களில், இது பொதுவாக ஓரினசேர்கை உறவில் செயலற்ற கூட்டாளியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இரண்டாவது வார்த்தையான (ஆர்செனோகோயிட்டாய்ஸ்) “ஆணுடன் உடலுறவு கொள்ளும் ஆண்” மனிதனைக் குறிக்கிறது. ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்கள் , “மலகோஸ்” என்பது இச்சையடக்கம் இல்லாத பலவீனமான ஒருவரைக் குறிக்கும் சொல் ஓரினசேர்கையாளரை குறிக்கவில்லை என்று வாதிடுகின்றனர். “ஆர்செனோகோயிட்டாய்ஸ்” பொறுத்தவரை, இந்த வார்த்தை பொதுவாக வயதுள்ள ஆண்கள் இளைய ஆண்களை பாலியல் அல்லது பொருளாதார சூழலில் தவறாக பயன்படுத்துவதை மட்டுமே குறிக்கிறது, என்று வாதிடப்படுகிறது. இருப்பினும், அத்தகைய வாதம் பழைய ஏற்பாடு வசனங்களே ஆதாரமாக வைத்தே பவுல் தன்னுடைய நிரூபங்களில் மேற்கோள்காட்டுகிறார் என்பதை கருத்தில் கொள்ள தவறிவிட்டது.

பவுல் “ஆர்செனோகோயிட்டாய்ஸ்” என்னும் வார்த்தையை லேவியராகமம் 18:22 மற்றும் 20:13 இலிருந்து பயன்படுத்துகிறார்.

22 பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே (arsēn) சம்யோகம் பண்ணவேண்டாம்; அது அருவருப்பானது. (லேவியராகமம் 18:22)
13 ஒருவன் பெண்ணோடே சம்யோகம்பண்ணுகிறதுபோல (koitē) ஆணோடே (arsēn) சம்யோகம்பண்ணினால், அருவருப்பான காரியம் செய்த அவ்விருவரும் கொலைசெய்யப்படக்கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக. (லேவியராகமம் 20:13)

“ஆர்செனோகோயிட்டாய்ஸ்” என்ற சொல் ஆர்செனோ, கோயிட்டாய்ஸ், என்ற இரண்டு சொற்களிலிருந்து வந்த ஒற்றை பெயர்ச்சொல். பவுல் 1 தீமோத்தேயு 1:8-11 இல் சட்டங்களைப் பற்றி விவாதிப்பதால்,நிச்சயமாக “ஆர்செனோகோயிட்டாய்ஸ்” என்னும் வார்த்தையை லேவியராகமத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார்.
“ஆர்செனோகோயிட்டாய்ஸ்” உடன் “மலகோஸ்” ஐ இணைப்பது ஓரினச்சேர்க்கை உறவுகளில் செயலற்ற செயலற்ற கூட்டாளியைக் குறிக்கும். எனவே, பவுல் பொதுவாக ஓரினச்சேர்க்கை உறவுகளை பாவம் என்று வகைப்படுத்தினார்.
மேலும், பவுல் பாலினத்தை தவறாக பயன்படுத்துவதை மட்டுமே குறிப்பிட விரும்பினால், “பைடெரஸ்ட்ஸ்”என்ற வார்த்தையைப் பயன்படுத்திருக்கலாம். இருப்பினும், இந்த சொல் புதிய ஏற்பாட்டில் எங்கும் பயன்படுத்தவில்லை. பவுலின் கரிசனை பாலினத்தை தவறாக பயன்படுத்துவதை மட்டும் அல்ல. மாறாக தேவனின் விருப்பத்திற்கு முரணான பாலினத்தின் பிரச்சினை பற்றியது.

*கேள்வி: பாலியல் தேவைகள் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ள அப்போஸ்தலன் பவுல் ஊக்குவிக்கிறார். ஓரினச்சேர்க்கையாளர்களை திருமணம் செய்து கொள்ள ஒருபாலீர்ப்பு ஆசை உள்ளவர்களுக்கு இதைப் பயன்படுத்த முடியாதா? அனைத்து ஓரினச்சேர்க்கையாளர்களும் விவாகம் பண்ணாமல் இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது தேவனின் பாலியல் ஈவை இழக்கச் செய்கிறது. ஒரு நபர் "ஒருபாலீர்ப்பு" ஆசைகளை வளர்த்துக் கொள்வது கூட தவறா?*

1 கொரிந்தியர் 7ஆம் அதிகாரத்தில், பவுல் பாலியல் ஒழுக்கக்குறைவுகளைத் தவிர்க்கும் சூழலில் பாலியல் விருப்பங்களை பற்றி பேசுகிறார். பவுல் தெளிவாக, திருமணத்தில் (ஆணும்,பெண்ணும் இணைந்த இணைப்பு ) மட்டுமே பாலியல் உறவு நன்மை தரும் என்கிறார்.

8 விவாகமில்லாதவர்களையும், கைம்பெண்களையும்குறித்து நான் சொல்லுகிறது என்னவென்றால்,
அவர்கள் என்னைப்போல இருந்துவிட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும். 9 ஆகிலும்
அவர்கள் விரத்தராயிருக்கக்கூடாதிருந்தால் விவாகம்பண்ணக்கடவர்கள்; வேகிறதைப்பார்க்கிலும்
விவாகம்பண்ணுகிறது நலம்.(1 கொரிந்தியர் 7:8–9)

பவுல் ஒரு ஓரினசேர்க்கை விருப்பம் கொண்ட ஒருவர் திருமணம் செய்ய வேண்டும் என்று எந்தக் குறிப்பும் தரவில்லை. மாறாக, அவர் திருமணம் செய்யாதவர்களின் வாழ்வின் நன்மைகளை முன்னிறுத்துகிறார், அவர்கள் தேவனுக்காக முழுமையாக தங்களை அர்ப்பணிக்கலாம் எனக் கூறுகிறார். (1 கொரிந்தியர் 7:25-35).

இரண்டு ஓரினசேர்க்கையாளர்கள் திருமணத்தில் இணையும்பொழுது அவருடைய பாலியல் விருப்பங்களை சரிசெய்வதில்லை. அது தேவனுடைய திருமண நோக்கத்திற்கு எதிராக இருப்பதால் மேலும் பாலியல் ஒழுக்கக்குறைவுகளை உண்டாகும்.

பவுலின் ஆலோசனையைப் பார்ப்போமென்றால், ஓரினசேர்க்கை விருப்பம் கொண்ட ஒருவர் தன் சரீரத்தின் விருப்பங்களை அடக்கிக் கொண்டு, தேவனுக்காக தன்னை அர்ப்பணித்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

வேதாகமம் முழுவதிலும் வேசித்தனத்திற்கும், விபச்சாரத்திற்கும் விலகும்படி தொடர்ந்து போதிக்கிறது. (யாத்திராகமம் 20:14, 17; மத்தேயு 5:28). அதே சமயம், விசுவாசிகள் தங்கள் சொந்த இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறாற்கள் (யாக்கோபு 1:14).

தங்கள் துணையல்லாத எந்த ஒருவரிடத்திலும் பாலியல் விருப்பம் கொள்ளும் சோதனையை எதிர்த்து விசுவாசிகள் "நிலைத்திருப்பதற்காக" பாடுபட வேண்டும்; சோதனைகளை ஜெயித்து நித்திய ஜீவகிரீடத்தைப் பெற வேண்டும் (யாக்கோபு 1:12). விசுவாசிகள் எந்த பாவமான தூண்டுதலையும் உதறி தள்ளிவிட்டு ஓடக்கடவர்கள்.

# போதகர் பதில்கள்

*1. ஒருவர் உங்களிடம் வந்து தனக்கு ஓர்பால் ஈர்ப்புகள் இருப்பதாக ஒப்புக்கொண்டால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?*

நாம் உடனடியாக அவரை குற்றவாளியாகநியாந்தீர்க்காமல், மனிதர்கள் அனைவரும் பாவிகளே; எல்லோருக்கும் தேவனின் கிருபையும் இரக்கமும் தேவை. அந்த நபரை தேவன் நேசித்து மீட்க விரும்புகிறார் என்பதைக் கொண்டே அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். (யோவான் 3:16; 2 பேதுரு 3:9). நாம் அந்த நபரை மரியாதையுடனும், மனதுருக்கத்தோடு நடத்தலாம். ஆனால், வேதாகம போதனைகளுக்கு எதிராகச் செய்யும் எந்த செயல்களையும் கண்டித்து உணர்த்துவது நம்முடைய பொறுப்பு. "ஓரினசேர்க்கை விருப்பங்கள்" மற்றும் "ஓரினசேர்க்கை செயல்கள்" என்பவற்றை வேறுபடுத்திப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம்.
ஒருவர் ஓரினசேர்க்கை இச்சைகளால் சோதிக்கப்படலாம்; ஆனால், அதைச் செயல்படுத்தாமல் இருக்கும் வரை அவர் குற்றவாளி அல்ல. அந்த நபர் "தேவனின் பிள்ளை" என்ற அடையாளத்தை உறுதிப்படுத்தி, இயேசு கிரிஸ்துவில் பரிசுத்தமான வாழ்க்கையைத் தொடர அவருடன் பயணிக்க வேண்டும். முடிந்த அளவு, அந்த நபரை ஓர் ஆவிக்குரிய உதவிக் குழுவுடன் இணைப்பது நல்லது.

*2. திருச்சபை உறுப்பினர் ஒருவர் ஓரினசேர்க்கையில் தொடர்ந்து ஈடுபட்டுவந்தால் அந்த சபை போதகர் என்ன செய்ய வேண்டும்?*

இரட்சிப்பு என்பது இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் கிடைக்கும் ஈவு. ஆனால், அவரை விசுவாசிக்கிற யாவரும் பரிசுத்தமான வாழ்க்கை வாழ பாடுபட வேண்டும்.
ஒருவரில் எழும் ஓரினசேர்க்கைகான விருப்பங்கள் பெரும்பாலும் அவரின் விருப்பத்தால் உருவாகவில்லை, அவருக்குள் ஏற்படும் பாலின முரண்பாடுகள் அவருடைய தெரிந்தெடுப்பும் இல்லை என்பதை நாம் அறியவேண்டும். அது அவர் செய்த குற்றமும் அல்ல. அதே நேரம் அந்த விருப்பம் இச்சையாக உருவாகி இழிவான பாலியல் உறவுக்குள் அதை அவர் செயல்படுத்துவது பாவமாகும். அதனால், அந்த நபரை திரும்பவும் பரிசுத்தத்திற்காக சரீரத்தை ஒப்புக்கொடுக்கவும் பாவச்செயல்களில் இருந்து மனந்திரும்பவும்,பரிசுத்த ஆவியின் பெலத்தால் சோதனைகளை வெல்ல அவரை ஊக்குவிக்க வேண்டும். தொடர்ந்து அவரை கண்டனம் செய்வதற்குப் பதிலாக, அவரின் குணப்படுத்துதலுக்கு இடம் கொடுப்பது நல்லது. பரிசுத்த வாழ்க்கை என்பது ஒரு நீண்ட கால பயணம், அதற்குத் தெளிவும் பொறுமையும் வேண்டும்.
சபை போதகர் எடுக்கும் பொதுவான நடவடிக்கைகள்
அந்த நபருடன் தனிப்பட்ட முறையில் சந்தித்து பேசி முக்கிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு, தேவையான போதனைகளையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

ஜெபம் மற்றும் ஏற்ற ஆலோசனைகளை வழங்க வேண்டும். தேவைப்பட்டால் முறையான மனநல ஆலோசனை (counselling) அளிக்க வேண்டும். ஒரு நபரை பொறுப்புணர்வுள்ள பங்குதாரராக (accountability partner) நியமித்து ஆவிக்குரிய வழிகளில் தொடர்ந்து அவரோடு பயணிக்க வேண்டும். தற்காலிகமாக தலைமை மற்றும் ஊழிய பொறுப்புகளில் இருந்து நீக்க வேண்டும்.

அவருடய வாழ்க்கையை சீரமைத்து மறுபடியும் அவர் ஊழியத்தை தொடர ஆவிக்குரிய வாழ்க்கயை கட்டவும், ஒரு மீட்பின் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் அந்த நபர் மனந்திரும்ப மறுத்தால், ஒழுங்கு குழு (disciplinary committee) அமைக்கப்படும், மற்றும் திருச்சபைசட்டத்தின்படி ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

*3. "ஓரினச்சேர்க்கையின் ஆவியில்" இருந்து விடுதலையாக நாம் ஜெபிக்க வேண்டுமா?*

சிருஷ்டிப்பில் காணப்படும் எந்தவித கோளாறும் வீழ்ச்சியின் விளைவாகும், பாவம் தேவனுடைய படைப்பின் அழகிய தன்மையைக் கெடுக்கிறது. பிசாசின் தாக்கம் மனிதனுடைய சரீரத்திலும் (வியாதி மற்றும் தீமையான காரியங்கள்) சிந்தையிலும், இருந்தாலும், எல்லா எதிர்மறை காரியங்களும் அசுத்த ஆவிகள் மூலமாக நேரடியாக ஏற்படுவதில்லை. வேதாகமத்தில், ஓரினச்சேர்க்கைக்குரிய நடவடிக்கைகள் எல்லாம் மனிதர்கள் தங்கள் சுய இச்ச்சையினால் ஈர்க்கப்பட்டு செய்யும் செயல்களாகவே பார்க்கப்படுகிறது. பாவத்தின் பிடிக்கு விலகி பரிசுத்தமாய் வாழும் பொறுப்பு மனிதனுக்கு இருக்கிறது. எனவே, சோதனையை ஜெயித்து புனிதமான பாலுணர்வில் வாழுவதே ஜெபத்தின் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்த மீட்பின் பயணத்தில் ஆவிக்குரிய சமூகத்தோடு இணைந்திருப்பது மிக முக்கியமானது.

*4. ஓரினச்சேர்க்கை ஈர்ப்புடையவர்களை கண்டு என் சபை பயப்படுகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளும் ஓர்பாலீர்ப்புடையவர்களை பின்பற்றிவிடுவார்கள் என்று கவலைப்படுகிறார்கள். அவர்களால் தீமையான பாதிப்புகள் உண்டாகும் என்று சபை பயப்படுகிறது. எங்கள் சபை எப்படி அவர்களை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.?*

நாம் நம் சபைக்கு பாலின உறவுகள் குறித்த கல்வியை வழங்க வேண்டும். இது, ஓரினச்சேர்க்கை ஈர்ப்பு காரணமாக போராடும் நபர்களுக்கு ஞானம், விவேகம்,மற்றும் தேவனுடைய அன்பிலே வளர உதவும். ஒரே பாலின ஈர்ப்புடன் போராடுபவர்களை அவர்களுடைய அடையாளத்தை வைத்து முத்திரை குத்துவதை நிறுத்த நம்முடைய சபைக்கு கற்றுக் கொடுங்கள். நம்முடைய குழந்தைகளும் வாலிபர்களும் தங்கள் பாலின அடையாளத்தில் குழப்பமடையாமல் இருக்க பரிசுத்தம், ஆவிக்குரிய நடத்தை மற்றும் இந்த பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை வளர்த்துக் கொள்ளவும் நாம் தயார்படுத்த வேண்டும். விசுவாச சமூகத்தில் வெற்றியோடு குழந்தைகள் வாழ சரியான புரிதலும் தீமையிலிருந்து விலக சரியான எல்லைகளை உருவாக்க கற்று தருவது அவசியம்.

*5. ஓரினச்சேர்க்கை ஈர்ப்புள்ளவர்கள் திருச்சபை ஊழியம் மற்றும் தலைமை பொறுப்புகளில் இருக்க முடியுமா?*

ஓரினச்சேர்க்கை ஈர்ப்புள்ளவர்கள் திருச்சபை ஊழியத்திலும் தலைமைப்பணிகளிலும் இருக்க தகுதியானவர்கள். அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் முன்னேறவும், தங்கள் வாழ்க்கையை ஆண்டவருக்காக பரிசுத்த ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும் (ரோமர் 12:1-2).
தேவன் அளித்த வரங்களை பயன்படுத்தி சபை ஊழியத்தில் ஈடுபடுத்தலாம் பரிசுத்த வாழ்க்கையில் நிலைத்திருக்கவும், ஆவிக்குரிய முதிர்ச்சி பெறவும் உற்சாகப்படுத்த வேண்டும். தலைமை பதவிகளுக்குத் தங்களை தகுதியாக ஆவிக்குரிய விஷயத்தில் வளர்ந்து தேவனுடைய வழிகளில் உறுதியாக நிற்க வேண்டும். வலுவான ஆவிக்குரிய குழுவோடு பொறுப்பாக இணைத்திருக்கவேண்டும்.

ஒருவேளை அவர்கள் மாம்ச இச்சைகளுக்கு இணங்கி பாவத்தில் (ஓரினச்சேர்க்கை நடத்தைகள்) ஈடுபட்டால் மீண்டும் பரிசுத்தத்திற்கு திரும்பி குணப்படும் வரை ஊழியத்திலிருந்து ஓய்ந்திருக்க வேண்டும்.

*6. போதகரே, நான் ஒரு ஓரினச்சேர்க்கையாளருடன் நட்பு கொள்ளலாமா? நம் வாலிபர்கள் ஓரினச்சேர்க்கையாளர்களுடன் ஐக்கியம் வைத்துக் கொள்ளலாமா ?*

ஓரினச்சேர்க்கை பழக்கமுள்ளவர்களை நம்முடைய நண்பர்கள் வட்டத்தில் வைத்துக்கொள்வதில் தவறு இல்லை. நாம் அவர்களை ஊக்குவித்தாலும் இல்லாவிட்டாலும் நம் வாலிவபர்களுக்கு அத்தகைய நண்பர்கள் இருப்பார்கள். தேவனுடைய அன்பும் கருணையும் நம்முடைய அடிப்படை நிலைப்பாடாக இருக்க வேண்டும். தேவன் நமக்கு காண்பித்த கிருபையும் இரக்கத்தையும் நாம் அவர்களுக்கு காண்பிக்க மறக்க கூடாது. நாம் காண்பிக்கும் உண்மையான அன்பும் பரிவும் அவர்கள் வாழ்க்கையில் தேவன் செயல்பட உதவக்கூடும். நாம் அவர்களை கிருபையாய் ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில், பாவமான வாழ்க்கை முறையை எதிர்க்கவேண்டும்.

*7. பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு போதக ஆலோசனையும் ஆதரவையும் எவ்வாறு வழங்குவது?*

போதக வழிகாட்டுதல், மனநல மற்றும் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைக்கேற்ப, அந்த நபர்களை தேவனின் நோக்கத்தின்படி தங்களின் மெய்யான பாலினத்தை மறுசீரமைக்க உதவலாம். தேவைப்பட்டால் தேவனின் மெய்யான பாலின வடிவமைப்புக்கு இசைவாக திருத்தம் செய்யும் அறுவைச் சிகிச்சையை செய்து கொள்ளலாம். தங்கள் மூல பாலினத்திற்குத் திரும்பிய பிறகு, அவர்கள் திருமணத்தை தொடரலாம். மறுசீரமைப்பு சாத்தியமில்லாத சந்தர்ப்பங்களில், திருமணமில்லாமல் வாழும் வாழ்க்கையைத் தேர்வு செய்வது சிறந்ததாக இருக்கும். இது அவர்களை தேவனின் பிள்ளையாக நிறைவான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ வழிவகுக்கும். கடந்த கால முடிவுகளுக்கு மனம்திரும்பி தேவனின் மன்னிப்பையும், கிருபையையும் பெற்று கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்க்கையை தொடங்கலாம். சபை தொடர்ந்து அவர்களுக்கு ஆலோசனைகொடுத்து அவர்களை ஆதரித்து ஜெபத்திலும் ஐக்கியத்திலும் வளர உதவ வேண்டும்.

*8. இருபாலின(ஆண் மற்றும் பெண்) உடலுடன் பிறந்தவர்களை நாம் எவ்வாறு ஆதரிக்கலாம் ? அவர்கள் ஒரு பாலினத்தைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொள்ள முடியுமா?*

ஒரு நபர் ஆண் மற்றும் பெண் பாலியல் உறுப்புகளுடன் பிறக்கும்போது, அவர்களின் உயிரியல் அமைப்பில் எதாவது ஒரு பாலின உணர்வு ஆதிக்கம் செலுத்தும். அவர்களின் ஆதிக்க பாலினத்தின் அடிப்படையில், மருத்துவ ஆலோசனை, உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆவிக்குரிய வழிகாட்டுதலின் ஆதரவுடன், அந்த நபர் தங்கள் உடலின் ஆதிக்க பாலினத்தை அடையாளம் கண்டு திருத்த அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ளலாம். இது எதிர்காலத்தில் திருமணத்திற்கான சாத்தியக்கூறு உட்பட நிறைவான வாழ்க்கையைத் தொடர அவர்களுக்கு அனுமதிக்கிறது.

*9. இது தொடர்பாக ஏதேனும் உதவிக் குழுக்கள் இருக்கிறதா?*

எந்த நபராவது உதவியை நாட விரும்பினால், (PLUC - Pursuing Liberty Under Christ) போன்ற பாலின பிரச்சினைகளுக்கான கிறிஸ்தவ ஆலோசனை வழங்கும் நிபுணர்களை தொடர்பு கொள்ள பரிந்துரைக்கலாம்.

# இறைப்பணியின் பதில்கள்

*1. ஓரினச்சேர்க்கையில் ஈடுபடும் ஒருவருடன் நாம் எவ்வாறு சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்வது?*

நிச்சயமாக நாம் அந்த நபருடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும், ஏனென்றால் எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாக மாறினோம். கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பை நாம் விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். (ரோமர் 3:23-25). அவர்களோடு உரையாடலில் ஓரினச்சேர்க்கையின் பாவத்தில் அதிக கவனம் செலுத்தாமல், நாம் அறிவிக்கும் சுவிசேஷம் இயேசு கிறிஸ்துவின் மீட்பை மையமாக கொண்டிருக்க வேண்டும்.

*2. ஒரே பாலின ஈர்ப்புகளுடன் போராடும் ஒரு விசுவாசியை சீஷராக்குவது எப்படி ?*

தேவனுடைய வார்த்தையை அறிந்து ஆவிக்குரிய ரீதியில் வளர விசுவாசியை வழக்கமாக நடக்கும் வேத பாட வகுப்புகளில் சேர அழைக்கலாம். (பிலிப்பியர் 3:8-11; 1 யோவான் 2:3, 5:20; 2 பேதுரு 3:18).தேவனுடைய வழிகளில் அவர்களை வழிநடத்தக்கூடிய ஒரு நபரை நியமிக்கலாம். அந்த விசுவாசியை பரிசுத்த ஆவியின் பெலத்தினால் சாட்சியுள்ள ஊழியம் செய்ய ஊக்குவிக்க வேண்டும். (அப்போஸ்தலர் 1:8). அவருடைய பாலினம் சார்ந்த போராட்டத்தில் அவருக்கு உதவியாயிருக்க ஒரு ஆவிக்குரிய குழுவை அமைப்பது நல்லது.

*3. ஓரினச்சேர்க்கை விருப்பங்களால் போராடும் விசுவாசியின் ஆவிக்குரிய பயணத்தின் நோக்கம் என்ன?*

பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டு இயேசு கிறிஸ்துவைப் போல மாறுவதே கிறிஸ்துவ வாழ்க்கையின் நோக்கமாகும் ஓரினச்சேர்க்கை விருப்பம் உடையவர்களும் மற்ற விசுவாசிகள் போலவே பரிசுத்தமான வாழ்க்கையை நாட வேண்டும். திருமணம் குறிக்கோள் அல்ல. எல்லாரும் திருமணம் செய்யவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இல்லை; ஒரு விசுவாசியின் பாலின விருப்பம் முற்றிலும் மாற வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் தவறாகும். சிலர் வாழ்க்கையின் இறுதி வரை ஓரினச்சேர்க்கை விருப்பங்களுடன் போராடுவார்கள். சீஷத்துவ பயணத்தில், ஓரினச்சேர்க்கை விருப்பங்களுக்கு மட்டுமே கவனம் செலுத்தி, மற்ற பலவீனங்களை கவனிக்காமல் விடக்கூடாது.

*4. ஓரினச்சேர்க்கை விருப்பங்களால் போராடும் மக்களுக்கான ஆதரவு அமைப்பை எப்படி உருவாக்கலாம்?*

சபைகள் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்க சிறு குழுக்களை உருவாக்கலாம். PLUC (Pursuing Liberty Under Christ) போன்ற அமைப்புகள், இந்த ஆதரவு குழுக்களை உருவாக்கவும், பயிற்சி அளிக்கவும் உதவுகிறது. மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்கு, அவர்களை ஒரு கிறிஸ்தவ உளவியல் ஆலோசகரிடம் அல்லது நேரடியாக PLUC அமைப்பிடம் அனுப்புவது சிறந்தது.

(புதுப்பிக்கப்பட்ட நாள்: 23 அக்டோபர் 2024)